කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

පොහොර නිෂ්පාදන හා සැපයුම්, රසායනික පොහොර හා කෘමිනාශක භාවිත නියාමන රාජ්‍ය අමාත්‍යාංශය
உரஉற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு
State Ministry of Production and Supply of Fertilizer and Regulation of Chemical Fertilizer and Insecticide Use

අංක. 80/5,ගොවිජන මන්දිරය, රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල
இல.80/5, கொவி ஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை
No. 80/5, Govijana Mandiraya, Rajamalwatta Avenue, Battaramulla

***Translated Copy***

මගේ අංකය. / எனது இல. / My No.: சுற்றறிக்கை: 7/1/3/2020/21 பெரும்போகம்
ඔබේ අංකය. / உமது இல. / Your No.:
දිනය. / திகதி. / Date.: 2020.10. 20

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்

## 2020/21 பெரும்போகத்தில் நெற் பயிர்களுக்கு உரங்களை விநியோகித்தல்

2020/21 பெரும்போகத்தில் நெற் பயிர்களுக்கு தேவையான 120,000மெ.டொ. அளவுடைய யூரியா உரத்தை ஆகஸ்ட் மாதம் இறுதியளவில் இந்த நாட்டிக்கு இறக்குமதி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கொவிட் - 19 தொற்றுநோய் நிலவரத்தினால் உலக சந்தையில் யூரியா உரத்திற்கான அதிக கேள்விநிலவுவதன் பேரில், அந்த உரத்தை உற்பத்தி செய்யும் நாடுகளின் துறைமுக இடநெருக்கடி காரணமாக மேற்குறித்த யூரியா உரம் இது வரை இந்த நாட்டிற்கு கிடைக்கவில்லை.

02. 60,000மெ.டொ. அளவான உரம் மிக விரைவில் கிடைக்கவுள்ளது. அந்த உரம் கிடைத்தவுடன் நெற் பயிர்களுக்குஇந்த பெரும்போகத்தில் நவம்பர் மாதத்திற்கு தேவையான யூரியா உரத்தை அரசாங்கத்தின் இரண்டு உரக் கூட்டுத் தாபனங்களினால் பெற்றுக் கொடுக்க இயலுமாகும்.

03. அதற்கிணங்க இந்த நிலைமையை கருத்திற் கொண்டு விவசாயத் திணைக்களத்தின் மூலம் நெற் பயிர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உர சிபாரிசுக்கு இணங்க ஆரம்ப உரமாக பயன்படுத்த வேண்டிய ரீ.எஸ்.பி. (சேற்று உரம்)உரம் மாத்திரம் தேவையான அளவு தற்பொழுது இந்த நாட்டில் காணப்படுகின்றது. ஆகையால் இந்த மாதம் (ஒற்றோபர்)28ஆம் திகதியாகும் போது அரசாங்கத்தின் இரண்டு உரக் கூட்டுத்தாபனங்களினதும் அனைத்து களஞ்சியசாலைகளுக்கும் நேரடியாக உரங்களை வழங்கும் கமநல சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் சேற்று உரங்களை கமநல அபிவிருத்தி நிலையங்களின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுவதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டியுள்ளது.

04. விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுகளுக்கு ஏற்ப நெற் பயிர்களுக்கு சேற்று உரத்தை இட்டு 14 நாட்களின் பின்னர் மாத்திரமேதேவையான யூரியா உரத்தையும் மற்றும் எம்.ஓ.பி. உரத்தையும் இடவேண்டும் என்பதால் குறித்த அந்த காலப் பகுதியினுள் நாட்டிற்கு கிடைக்கும் யூரியா உரத்தை குறித்த உரிய நேர காலத்திற்கு அரசாங்கத்தின் உரக் கூட்டுத் தாபனங்களின் ஊடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

05. ஆகையால் சேற்று உரம் (ரீ.எஸ்.பி.)சரியாக உரிய முறையில் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும்மற்றும் அந்த நடவடிக்கைகளை தனிப்பட்ட ரீதியில் கண்காணிக்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

06. மேலும் இது வரையிலும் யூரியா உரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டிய பிரதேசங்களுக்கு தேவையான யூரியா உரம் ஏற்கெனவே உரக் கம்பனிகள் வசம் இருக்கின்ற “கிரனியுலா”அல்லது “ப்ரில்”யூரியா உரங்களில் இருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.என். ரணசிங்க,
இராஜாங்க செயலாளர்,
உரங்கள் உற்பத்தி மற்றும் வழங்கல், இரசாயன உரங்கள்
மற்றும் கிருமிநாசினிகள் பாவனை ஒழுங்குறுத்துகை
இராஜாங்க அமைச்சு

**பிரதிகள்:-**

1. செயலாளர், கமத்தொழில் அமைச்சு (அறிந்து கொள்ளும் பொருட்டு - அ.கொ.பொ.)
2. செயலாளர், நிதி அமைச்சு (அ.கொ.பொ.)
3. நெல் மற்றும் தானியங்கள், இயற்கை உணவுகள், மரக்கறி, பழ, மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு பயிர்கள் ஊக்குவிப்பு, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில் நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு (அ.கொ.பொ.)
4. செய்திப் பணிப்பாளர் நாயகம் (அ.கொ.பொ.)
5. செயலாளர், மாகாண கமத்தொழில் அமைச்சு (அ.கொ.பொ.)
6. விவசாய பணிப்பாளர் நாயகம் (அ.கொ.பொ.)
7. மகாவலி பணிப்பாளர் நாயகம் (அ.கொ.பொ.)
8. தலைவர், வ/ப இலங்கை உரக் கூட்டுத் தாபனம் (மேற்குறித்தவாறு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு)
9. தலைவர், வ/ப வர்த்தக உரக் கூட்டுத் தாபனம் (மேற்குறித்தவாறு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு)
10. சகல மாவட்ட செயலாளர்கள் (அ.கொ.பொ., தேவையான நடவடிக்கையின் பொருட்டு - தே.ந.எ.பொ.)
11. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), கமத்தொழில் அமைச்சு (அ.கொ.பொ.)
12. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு (அ.கொ.பொ.)
13. பணிப்பாளர், தேசிய உர செயலகம் (அ.கொ.பொ.,தே.ந.எ.பொ.)
14. தேசிய உர செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் (அ.கொ.பொ., தே.ந.எ.பொ.)